# மனைப்பொருளியல்

## புடைவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக கையாளப்படும் தொழினுட்ப முறைகள்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

# 7.5 புடைவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகளின் தரத்தை மேம்படுத்தும் முறைகள்

## 1 துணி மேற்பரப்பில் அலங்கார உருக்கள் இடுவதன் அவசியம்.

⇒ தனி நிறத்துணிகளின் ஒரே வகையான தன்மையில் இருந்து மீள்வதற்கு

⇒ ஆடைகள் அணிவதற்கு எடுப்பான தோற்றத்தைப் பெறுவதற்கு

⇒ ஒருவரின் உடலமைப்பபை வெளிக்காட்டுவதற்கு

உ+ம் கொழுத்த ஒருவரை மெல்லிய தோறறத்திலும் , மெல்லிய ஒருவரை கொழுத்த தோறறத்திலும் காட்டுதல்

⇒ உயரமானவர்களை குறைத்தும், உயரம் குறைவானவரை உயரத்தை கூட்டியும் காட்டல்.

⇒ ஆடைகள் அணிபவரின் கவர்ச்சி தன்மையை அதிகரிப்பதற்கு

உ+ம் சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள்

⇒ இளநீலநிற மற்றும் வெண்ணிற ஆடைகள் மூலம் உடலின் தோற்றம் பெரிதாகக் காட்டப்படும்

⇒ கடும்நிற மற்றும் ஆடைகள் மூலம் உடலின் தோற்றம் சிறிதாக காட்டப்படும்

உ+ம் கபிலம், மரூன், செங்கபிலம்


## 2. துணிகளை அச்சிடல்

துணியில் அச்சிடும் போது தெரிவு செய்த பகுதிகளில் மாத்திரம் வர்ண அலங்காரவுருக்கள் இடப்படுவதும் சாயமூட்டலின் போது முழுத்துணியும் சாயக் கரைசலினுள் அமிழ்த்தப்படுவதும் துணியில் அச்சிடல் ஆகும்.

தொகுப்பு : திரு செல்வரட்ணம் பாஸ்கரன் , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - மு/பராதி.ம.வித்தியாலயம்
திருமதி தி. பிரசாளினி , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - கி / ஜெயபுரம்.ம.வித்தியாலயம்
செல்வி. ஆ. சுதாசினி , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - கி / முழங்காவில் ம.வித்தியாலயம்
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் (த.தொ.தொ.) - மு/உடையார்கட்டு.மகா வித்தியாலயம்
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## துணிகளை அச்சிடும் முறைகள்




### 1. அச்சுப் பதித்தல்

1. உருளைக்கிழங்கு, வெண்டிக்காய் துண்டு போன்றவற்றில் சாயம் தடவி அச்சுப் பதிக்க முடியும்
2. இறப்பர் முத்திரையினால் குத்தப்படும் முத்திரைகளும் ஒரு வகை அச்சுப்பதிப்பாகும்.
3. அச்சுப்பதிக்கும் ஆக்கங்களை ஆக்குவதற்கு மரக்கட்டை, உலோகம், லினோலியம் போன்றன பயன்படுத்தப்படும்.
4. அச்சுப் பதிப்பிற்கான அச்சுக்களை ஆக்கும் இரண்டு முறைகள் உள்ளன.
    - ஆக்கத்திற்குத் தேவையான அலங்கார உருக்களை மீதியாக விட்டு ஏனைய பகுதிகளை நீக்குதல்
    - ஆக்கத்திற்குத் தேவையான பகுதிளை நீக்கி ஏனைய பகுதிகளை விட்டு வைத்தல்.
5. அச்சுப் பதித்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட நிறங்கள் பயன்படுத்துவதாயின் வெவ்வேறு அச்சுக்கள் தயாரிக்க வேண்டும்.
6. அச்சு மீது சாயம் பூசுவதற்கு பல்வேறு முறைகளைக் கையாளலாம்
    1. தூரிகைளினால் சாயம் பூசுதல்
    2. அணை மூலம் சாயம் பூசுதல்
    3. உருளை மூலம் சாயம் பூசுதல்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திரு செல்வரட்ணம் பாஸ்கரன் , ஆசிரியர் (மனைப்பொருளியல்) - மு/பாரதி.ம.வித்தியாலயம்
திருமதி தி. பிரசாளினி , ஆசிரியர் (மனைப்பொருளியல்) - கி / ஜெயபுரம்.ம.வித்தியாலயம்
செல்வி. ஆ. சுதாசினி , ஆசிரியர் (மனைப்பொருளியல்) - கி / முழங்காவில் ம.வித்தியாலயம்
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் (த.தொ.தொ.) - மு/உடையார்கட்டு.மகா வித்தியாலயம்
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 2. உருவரை தகட்டுமுறை அச்சிடல்

- இம்முறை யப்பானியர்களால் மேலும் விருத்தி செய்யப்பட்டுள்ளது.
- X கதிர்த்தாள் / பிரிஸ்டல் அட்டைகளைப் பயன்படுத்தி உருவரை வெட்டித் தயாரிக்கலாம்.
- வெட்டிய உருவரைக் கட்டை துணியின் மீது வைத்த சாயம் பதியச் செய்வதன் மூலம் அச்சுப்படுத்தலாம்.
- துணியின் மீது உருவரைத் தகட்டை வைத்து சாயம் பூசுவதற்காக தூரிகை / கடற்பஞசுத் துண்டை பயன்படுத்தலாம்.
- அச்சுப் பதித்த துணியில் வர்ணம் உலர்ந்த பின்னர் அத்துணிப் பகுதி மீது வேறு மெல்லிய துண்டொன்று விரித்து சூடான அழுத்தியால் அழுத்தவதன் மூலம் சாயத்தை உறுதியாகப் பதித்தக் கொள்ளலாம்.
- சேலைகள், வேறு துணிகளில் அச்சுப் பதிப்பதற்கு அம்முறை பயன்படும்.

## 3. திரை அச்சிடல்

- இம்முறையின் போது காட்டுருவை மீதியாக விட்டு, காட்டுருவின் பிண்னணி மீது சாயம் பூசப்பட்டு அது உலர்ந்த பின்னர் அதன் மீது அரக்குச் சாயம் பூசுதல் மூலம் உறுதியான பிண்னணியை ஆக்கலாம்.
- அச்சிடும் போது சட்டகத்தின் ஒரு அந்தத்தினால் புகுத்தப்படும் கெட்டியான அச்சாயமானது அமத்தும் முறையின் மூலம் மற்றைய அந்தம் வரை கொண்டு செல்லப்படும்.

## 4. உருளை முறையில் அச்சிடல்

- காட்டுருக்கள் பாதிக்கப்பட்ட உருளைகளே இதற்குப் பயன்படும்
- பல நிறங்கள் பயன்படுத்துவதாயின் ஒவ்வொரு நிறத்திற்கும் ஒவ்வொரு உருளைகளே பயன்படுத்தப்பட வேண்டும்.
- உருளையின் மீது துணியைச் செலுத்துவதால் உருளையில் உள்ள காட்டுரு துணியில் பதிக்கப்படும்.

தொகுப்பு : திரு செல்வரட்ணம் பாஸ்கரன் , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - மு/பராதி.ம.வித்தியாலயம்
திருமதி தி. பிரசாளினி , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - கி / ஜெயபுரம்.ம.வித்தியாலயம்
செல்வி. ஆ. சுதாசினி , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - கி / முழங்காவில் ம.வித்தியாலயம்
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் (த.தொ.தொ.) - மு/உடையார்கட்டு.மகா வித்தியாலயம்
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 5. முடிச்சிட்டுச் சாயமூட்டும் முறை

- மேற்பரப்பில் அலங்காரவுருக்களைப் பதிப்பதற்காக பயன்படுத்தும் எதிர்ப்புவரை அச்சுப்பதித்தல் முறையாகும்.
- துணியால் இடத்துக்கிடம் முடிச்சிடல், தைத்தல், போன்ற உத்திகள் மூலம் சீராகச் சாயம் அகத்துறிஞ்சப்பட்டு பதிக்கப்படும்.
- சாயமிட்ட பின்னர் துணியை உலர்த்த வேண்டும்.
- உலர்ந்த பின் கட்டுக்களை அவிழ்த்துவிடல்.

## 6. பத்திக் முறை

- பூசும் சாயத்துக்கு எதிர்ப்புத்தன்மை காட்டும் இரசாணயப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றமையால் இம்முறை எதிர்ப்பு முறை அச்சுப்பதித்தல் எனப்படும்.
- இங்கு லினன், பருத்தி, பட்டு ஆகிய வகைத் துணிகள் பயன்படுத்தப்படும்.

### பத்திக் முறையில் அச்சிடப்படும் செயன்முறை

1. துணியை நீரில் அமிழ்த்தி அவித்தல் (பசை நீக்கலுக்காக)
2. துணியை உலர்த்தி அழுத்துதல்
3. கட்டுருவைக் குறித்தல்
4. கட்டுருவின் வெவ்வேறு இடங்களில் திரவ மெழுகு பூசுதல்
5. முதலாவது நிறத்தைக் கொண்டு நிறமூட்டல்
6. அவ்வாறு நிற மூட்டிய இடங்களில் மெழுகு தடவுதல்
7. இரண்டாவது நிறத்தைக் கொண்டு நிறமூட்டல்
8. முழு அலங்கார உருவும் வெளிப்படும் வகையில் நிறமூட்டல்
9. இளவர்ணம் - கடும் வர்ணம் வரையில் சாயமூட்டல்
10. ஒவ்வொரு வர்ணமும் பூசியபின்னர் துணியை ஊற விட்டு மெழுகு பூசுதல்
11. நிறமூட்டிய பின்னர் மெழுகை நீக்குதல்
12. இளஞ்காற்றில் உலர்த்துதல்
13. அழுத்துதல்

தொகுப்பு : திரு செல்வரட்ணம் பாஸ்கரன் , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - மு/பராதி.ம.வித்தியாலயம்
திருமதி தி. பிரசாளினி , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - கி / ஜெயபுரம்.ம.வித்தியாலயம்
செல்வி. ஆ. சுதாசினி , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - கி / முழங்காவில் ம.வித்தியாலயம்
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் (த.தொ.தொ.) - மு/உடையார்கட்டு.மகா வித்தியாலயம்
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk








- பத்திக் முறையில் சாயமூட்டுவதற்காக ஒட்டுவதால் நப்தோல், சாயம், வற் சாயம், நார்த் தொழிற்பாட்டுச் சாயம், போன்றவை நார் வகைக்கேற்ப தெரிவு செய்யப்படும்.
- துணியை நீண்ட நேரம் சாயத்தினுள் அமிழ்த்தி வைப்பதன் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அமிழ்த்தி வைப்பதாலும் கடுமையான நிறங்களைப் பெறலாம்.

## 3. வர்ணம் தீட்டுதல்

துணியில் வர்ணம் தீட்டும் வெவ்வேறு முறைகள் உள்ளன. அவையாவன:

⇒ தூரிகையைப் பயன்படுத்தி உபகரணங்கள் இன்றி கையால் துணிமீது வர்ணம் தீட்டுதல்

⇒ துணியின் மீது அலங்காரவுருக்களைப் பிரதி செய்து அவற்றின் மீது தூரிகையினால் வர்ணம் தீட்டுதல்.

⇒ விரலினால் சாயத்தைத் தொட்டு, அவ் விரலைக் கொண்டு துணியின் மீது கோலங்கள் தோன்றுமாறு வரைதல்.

⇒ நூலும் உருளையும் பயன்படுத்துவதன் மூலம், கடற்பஞ்சுத்துண்டு மூலமும் தாவரப்பகுதிகள் மூலமும் வர்ணம் தீட்டலாம்.

## 4. அலங்காரத்தையல் முறை

- துணியின் மேற்பரப்பை அழகுபடுத்தும் ஒரு முறையாகும்.
- கையாலும் தையற் பொறியினாலும் அலங்காரத்தையல்கள் இடலாம்.
- ரேந்தை வகை தயாரிப்பதற்கும் அலங்காரத்தையல் முறை பயன்படுகிறது.
- துணியின் வகைக்குப் பொருத்தமான ஊசிவகைகளைப் பயன்படுத்தி அலங்காரத்தையல்களை இட வேண்டும்.
- பிரசீலியன் அலங்காரத்தையல் முறையில் பல்வேறு வகையான அலங்காரத்தையல் முறைகள் உள்ளன.

## 5. அப்பிளிக்கே வேலை செய்தல்

- அழகிய துணித்துண்டொன்றில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட ஒரு காட்டுருவை மற்றுமொரு துணியின் மீது வைத்து பொருத்துவதே “அப்பிளிக்கே வேலை செய்தல்” ஆகும்.

தொகுப்பு : திரு செல்வரட்ணம் பாஸ்கரன் , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - மு/பாரதி.ம.வித்தியாலயம்
திருமதி தி. பிரசாளினி , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - கி / ஜெயபுரம்.ம.வித்தியாலயம்
செல்வி. ஆ. சுதாசினி , ஆசிரியர் (மனைப்பொருளியியல்) - கி / முழங்காவில் ம.வித்தியாலயம்
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் (த.தொ.தொ.) - மு/உடையார்கட்டு.மகா வித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk